//மிக மிக அவசரம் //

// தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4203 /ஆ1/2022, நாள் : 19.10.2022

பொருள்: நேர்தல் – வேலூர் மாவட்டம் – தேர்தல் எழுத்தறிவு (ELC) பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு சுவர் இதழ் (Wall Magazine) போட்டிகள் நடத்துதல் – சார்பாக.

பார்வை :
1. வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். /எச்.2/5506/2022, நாள். 22.09.2022.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் : 27.09.2022

#######

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க தேர்தல் எழுத்தறிவு (Electoral Literacy Clubs) பள்ளி மாணவ / மாணவியர்களுக்கிடையே பிரபலப்படுத்துவதற்காக பள்ளிகளில் 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு என் வாக்கு என் உரிமை, ஒரு வாக்கின் வலிமை (My Vote is my Right – Power of One Vote) என்ற கருப்பொருளை மையமாக கொண்டு 9, 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் வரைதல் போட்டிகள் நடத்தப்படவேண்டும் என அறிவுறுதப்பட்டது.

மேலும், பார்வையில் காணும் கடிதத்துடன் வரப்பெற்ற இணைப்பு–II, சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் வரைதல் மாதிரி வரைபடம் தமிழ் மற்றும் ஆங்கிலம், முதல் மூன்று இடங்களைப் பெறும் நபர்களின் விவரம் அனுப்ப வேண்டிய பட்டியலுடன், மேற்படி போட்டிகள் நடத்துவது தொடர்பான விளக்கங்கள் மற்றும் போட்டிகள் நடத்தப்படும் உத்தேச பள்ளிகளின் விவரங்கள் தெரிவிக்க வேண்டிய பட்டியல் ஆகியன தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கும் படி பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கோரப்பட்டது, மேலும் இணைப்பு –II–ல் தெரிவித்துள்ளபடி அறிவுரைகளை பின்பற்றி உரிய தேதியில் இப்போட்டிகளை நடத்தி முழுமையாக அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு இணைப்பு இரண்டில் காணும் அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கபட்டதில் ஒருசில பள்ளி தலைமை ஆசிரியர்களிடமிருந்து மட்டுமே போட்டிகள் நடத்தி அறிக்கை பெறப்பட்டது.

இணைப்பில் குறிப்பிட்ட 25 பள்ளிகளில் வரிசை எண்களில் வட்டமிடப்பட்டுள்ள எண்களின் தலைமை ஆசிரியர்கள், தனி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொண்டு போட்டிகளை நடத்தி போட்டிகளில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்களின் விவரங்களை கல்வி உலகம் உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் திரு.சிவவடிவு அவர்களிடம் 20.10.2022 அன்று மாலை 3 மணிக்குள் நேரில் அளிக்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வரைதல் போட்டிகளின் சுவர் இதழுடன் (Wall magazine) நேரில் ஒப்படைக்குமாறு 25 பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு–
1. பார்வை கடித நகல்.
2.பள்ளிகளின் பெயர் பட்டியல்

பெறுநர் :
இணைப்பு 2–ல் காணும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.

நகல்– வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//

| Public (Ele.VII) Dept. | | | |
|---|---|---|---|
| S.No | Name of the District | Name of the Institution / SHG for the Competition | |
| | | Category - I | |
| | | Name of the 25 Institutions where Students below 18 years belonging to classes IX, X, XI, and XII taking part in Wall Magazine in Poster form competition | Name of the Taluk |
| 1 | Vellore | TMKV GOVT BOYS HSS KANGEYANALLORE, VELLORE DISTRICT | Katpadi |
| 2 | Vellore | TMKV GGHSS Kangeyanallur, VELLORE DISTRICT | Katpadi |
| 3 | Vellore | GOVT BOYS HSS KATPADI, VELLORE DISTRICT | Katpadi |
| 4 | Vellore | GOVT GIRLS HSS KATPADI, VELLORE DISTRICT | Katpadi |
| 5 | Vellore | GOVT. HS THATHIREDDIPALLI, VELLORE DISTRICT | Katpadi |
| 6 | Vellore | GOVT. HS Karikiri, VELLORE DISTRICT | Katpadi |
| 7 | Vellore | GOVT. BOYS HSS THIRUVALAM, VELLORE DISTRICT | Katpadi |
| 8 | Vellore | GOVT. GIRLS HSS THIRUVALAM, VELLORE DISTRICT | Katpadi |
| 9 | Vellore | GOVT. HS , MACHANUR, VELLORE DISTRICT | K.V.Kuppam |
| 10 | Vellore | GOVT. GIRLS HSS , KVKUPPAM, VELLORE DISTRICT | K.V.Kuppam |
| 11 | Vellore | GOVT. BOYS HSS ,LATTERI, VELLORE DISTRICT | K.V.Kuppam |
| 12 | Vellore | GOVT. GIRLS HSS, LATHERI, VELLORE DISTRICT | K.V.Kuppam |

| | | | |
|---|---|---|---|
| 13 | Vellore | Mpl. HS SALAVANPET, VELLORE DISTRICT | Vellore |
| 14 | Vellore | GHSS KONAVATTAM, VELLORE DISTRICT | Vellore |
| 15 | Vellore | Aided HSS SRI VENKATESHWARA, VELLORE DISTRICT | Vellore |
| 16 | Vellore | KRISHNASAMY HSS, SAINATHAPURAM, VELLORE DISTRICT | Vellore |
| 17 | Vellore | AIDED HSS ST. MARY'S, VELLORE, VELLORE DISTRICT | Vellore |
| 18 | Vellore | VKVM GOVT. GIRLS HSS, VELAPADI, VELLORE DISTRICT | Vellore |
| 19 | Vellore | SUNBEAM MATRIC HSS, METTUKULAM, VELLORE DISTRICT | Katpadi |
| 20 | Vellore | SHRISHTI MATRIC HSS, BRAMMAPURAM, VELLORE DISTRICT | Katpadi |
| 21 | Vellore | KINGSTON MATRIC HSS, KATPADI, VELLORE DISTRICT | Katpadi |
| 22 | Vellore | LAKSHMI GARDEN MHSS, VELLORE, VELLORE DISTRICT | Vellore |
| 23 | Vellore | VIDHYALAKSHMI SCHOOL, CHENNANKUPPAM, VELLORE DISTRICT | K.V.Kuppam |
| 24 | Vellore | OM SAKTHI NARAYANI MATRIC HSS, SRIPURAM, VELLORE DISTRICT | Vellore |
| 25 | Vellore | VIDHYANIKETHAN MAT HSS,GANDHINAGAR, VELLORE DISTRICT | Katpadi |